மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ சோபகிருது வருடம் கார்த்திகைத்திங்கள் 27 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 376/2021-ல்**

**அசல் வழக்கு எண்.106/2021**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி முன்சிபி, மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி நகரம், தற்சமயம் கதவு எண்.85, வ.உ.சி.ரோடு, 6 நம்பர் வாய்க்கால், என்ற முகவரியில் வசிக்கும் அனந்தகிரு.குமாரர், இந்து, 37 வயதுள்ள A. நரசிம்மன்.

.... மனுதாரர்/வாதி

**// எதிர் //**

1. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி முன்சிபி, மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி நகரம், கதவு எண்.5, பாலகிருஷ்ணா நகர், என்ற முகவரியில் வசிக்கும், சோமசுந்தரம் குமாரர் , இந்து, 60 வயதுள்ள S.சிவசுப்பிரமணியன்.
2. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி முன்சிபி, மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி நகரம், கதவு எண்.5, பாலகிருஷ்ணா நகர் என்ற முகவரியில் வசிக்கும், சோமசுந்தரம் குமாரர், இந்து, 58 வயதுள்ள S.செந்தில்வேலவன்.
3. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி முன்சிபி, மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி நகரம், கதவு எண்.5, பாலகிருஷ்ணா நகர், என்ற முகவரியில் வசிக்கும் சோமசுந்தரம் மனைவி, இந்து, 56 வயதுள்ள S.செண்பகவள்ளி.
4. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி முன்சிபி, மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி நகரம், கதவு எண்.5, பாலகிருஷ்ணா நகர் என்ற முகவரியில்

வசிக்கும் சோமசுந்தரம் குமாரத்தி, இந்து, 54 வயதுள்ள S.ரேவதி.

..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது மனுச்சொத்திலிருந்து மனுதாரர்/வாதியை சட்டமுரணாக வெளியேற்றவோ அல்லது மனுதாரர்/வாதியின் மருந்து வியாபாரத்திற்கு எந்த வகையிலும் தடை செய்யவோ இடையூறு செய்யவோ கூடாது என்று அசல் வழக்கு முடியும் வரையில் ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளையும், அதே ரீதியில் மனு விசாரணை முடியும் வரையில் ஒருதலைப்பட்சமாக ஒரு இடைக்கால உத்தரவு வழங்கி உத்தரவிடக்கோரியும் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 -ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 08.11.2021, 09.11.2021

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 09.11.2021

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G.ஜீவானந்தம் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்பாணை உத்தரவு**

1. இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகைஇல்லை.

**<u>சொத்து விபரம்</u>**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி நகரம், பாலகிருஷ்ணா நகர், கதவு எண்.5 கொண்ட ஆர்.சி.சி ஓட்டு கட்டிடத்தில் உள்ள கீழ் தளம் கட்டிடம் இதில் உள்ள பாபா மருந்தகம், மின் இணைப்பு, நகராட்சி குடிநீர் பொது புழக்கம் போர்வெல் தண்ணீர் பொது புழக்கம், கட்டிடத்தில் கீழ்புறம் காலிமனை பொது புழக்கம் உள்படவும்.

2023 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(S/d. A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)